# எறும்பும் வெட்டுக்கிளியும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# எறும்பும் வெட்டுக்கிளியும்





கோடைகாலத்தில், வெட்டுக்கிளி ஒன்று அங்கும் இங்குமாய் குதித்து விளையாடியது. அந்த வழியில் எறும்பு அதன் உணவுகளைச் சேகரித்து அவற்றைச் சுமந்து சென்றது. அதைப் பார்த்த வெட்டுக்கிளி எறும்பிடம், “இப்போது என்ன அவசரம் சிறிது நேரம் நீயும் என்னுடன் விளையாடலாமே?” என்றது.



அதற்கு எறும்பு “இன்னும் சில நாள் கழித்து மழைக்காலம் ஆரம்பித்து விடும் அச்சமயம் வீட்டை விட்டு வெளியே வர முடியாதே!” என்றது. அதற்கு வெட்டுக்கிளி எறும்பிடம் மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கிறது. நான் விளையாடப் போகிறேன் என்று சிரித்துக்கொண்டே சென்றது. சில நாட்கள் கடந்தன. மழைக்காலம் வந்தது.



எறும்பு தான் சேகரித்த உணவைத் தன் வீட்டில் உண்டு மகிழ்ந்தது. ஆனால் வெட்டுக்கிளியோ உண்ண உணவின்றி மழையில் சுற்றித் திரிந்தது. அப்போது வெட்டுக்கிளி, “எறும்பு உணவு சேகரித்து வைத்திருக்கும் அதனிடம் கேட்டால் என்ன?” என்று எண்ணியது. வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்கு வந்தது.



எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதேனும் உணவு தருகிறாயா? எனக் கேட்டது. எறும்பும் தன்னிடம் உள்ள உணவில் சிறிதளவு வெட்டுக்கிளிக்குக் கொடுத்தது. “அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே, இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நம் இருவருக்கும் உதவுகிறது” என்று கூறியது. இனி “நீ சோம்பலில்லாமல் வெயில்காலத்தில் மழைக்காலத்திற்கு தேவையானவற்றைச் சேமித்துக்கொள்” என்றது.



# கதையின் நீதி



காலத்திற்கு ஏற்ப நாம் உழைக்க வேண்டும்.




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com